ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2192/64 - 2020 සැප්තැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2020.09.11

*2192/64 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 21/78* (XV) *(அ)*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*21 ஆம் பிரிவுடனும் 139 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இலங்கை றுஹுணு பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்றதும், (2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதிய 2126/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும்), 1984 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதிய 281/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற “முகாமைத்துவ மற்றும் நிதிப்பீடம்” என்னும் விடயத்துக்கு நேரொத்ததாக அவ்வட்டவணையின் நிரல் II இல் காணப்படுகின்ற “மனிதவள முகாமைத்துவத் துறை” என்னும் பதிவீட்டை உடனடுத்துப் பின்வரும் புதிய பதவீட்டைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

“5. வியாபார முகாமைத்துவத் துறை”.

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்**,
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2020, செத்தெம்பர் 08.*

*09-684*

1A - PG 5130 — 520 (2020/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.